HHR16-1-1-TA

# எல்லா கிறிஸ்தவர்களும் எடுத்துகொள்ளப்படுவார்கள் என்பதற்கான வேதாகம அடித்தளம் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு John Ankerberg Show வில், உலகையே உலுக்கக்கூடிய மூன்று முக்கிய நிகழ்வுகளை பற்றி பைபில் பேசுகிறது. முதலில், காரணமேதுமின்றி லட்சக்கணக்கான மக்கள் திடீரென்று மாயமாவார்கள். இரண்டாவதாக வல்லரசு என்கிற உலக அதிகாரம் United States சிடமிருந்து விலகவிடும். மூன்றாவது, ஒரு உலக ஆட்சியாளன் உதயமாகி, உலகத்திற்கே என்னால் தான் ஸ்திரத்தன்மையையும், சமாதானத்தை கொடுக்க முடியும் என்பான். இவைகள் ஏன் நடைபெற வேண்டும் ? பைபிள் சொல்கிறது, "பின்பு உயிரோடிருக்கும் நாமும் **கர்த்தருக்கு** எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் **கர்த்தருடனேகூட** இருப்போம். இவைகள் நடக்கும் போது அவிசுவாசிகள் மட்டும் பூமியில் கைவிடப்படுவார்கள்.

இன்று, நம் நாட்டில் தலைசிறந்த மூன்று தீர்க்கதரிசன அறிஞர்களை, பைபிளிலிருந்து எடுத்துக்கொள்ளுதல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை கலந்தாராய அழைத்திருக்கிறேன். அவர்கள் : Dr. Ed Hindson, Rawlings தெய்வீகப்பள்ளியில் டீனாக(Dean) ஆக இருக்கிறார். லிபர்டி பல்கலைகழகத்தில் மதப்பிரிவில் புகழ்பெற்ற பேராசிரியர்.

ஒளிபரப்பான  “ராஜா வருகிறார்” நிகழ்ச்சியில் பேச்சாளராகவும், தீர்க்க தரிசனம் குறித்து 40 புத்தகங்களை எழுதியிருக்கிறார்.  5 பைபிள் படிப்பிற்கு பதிப்பாசிரியராகவும் இருந்திருக்கிறார்.

இரண்டாவதாக, Dr. Mark Hitchcock, டாலஸ் இறையியல் கருத்தரங்கில் இணை பேராசிரியராக இருக்கிறார். பைபில் தீர்க்க தரிசனத்தைக் குறித்து 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார். விசுவாச பையில் ஆலயத்தின் மூத்த ஆயராகவும் விளங்குகிறார்.

மூன்றாவதாக, Dr. Ron Rhodes, பைபிளிலிருந்து காரணம் கூறி விளக்கும் வேதாகம ஊழியத்தின் தலைவராக இருக்கிறார். டாலஸ் இறையியல் கருத்தரங்கில் போதிக்கிறார். தீர்க்க தரிசனம் குறித்து 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். John Ankerberg ன் புதிய சிறப்பு நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம். நான் John Ankerberg, நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டதற்கு நன்றி. கடந்த 30 நாட்களில் 85 லட்சம் மக்கள் சமூக வளைதளங்களில் எங்களை தொடர்புக்கொண்டுள்ளனர் என்பது உங்களுக்கு தெரியுமா ? அதில் மூன்றில் ஒரு பங்கானோர் இன்று நாம் பேசப்போகும் தலைப்பை பற்றி நிறைய கேள்விகளை ஆவலுடன் கேட்டிருந்தனர். இயேசு கிறுஸ்துவின் வருகையின் போது இந்த பூமியின் நிகழ்வுகள் எப்படி இருக்கும் என்பதே கேள்வி. ஆகையால், தீர்க்கதரிசனம் குறித்து பைபிள் தெளிவாக என்ன சொல்கிறது என்பதை விவாதிக்க இந்த நாட்டின் மிகச் சிறந்த மூன்று அறிஞர்களை அழைத்திருக்கிறேன். Dr. ED ஹின்ஸ்சன், Dr. ஹிட்ச்காக்,

Dr. ரோன் ரோட்ஸ். இவர்கள் அனைவரும் தீர்க்கதரிசனம் குறித்து 140 பைபிள் புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இயேசு கிருஸ்துவின் வருகையை குறித்து பைபிளில் உள்ள முக்கிய வாக்கியங்களிலிருந்து இன்று துவங்கலாம் என்று நினைக்கிறேன். வேத வசனங்கள் முதலில் அவரின் வருகையை குறித்து என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

1தெசலோனிக்கேயர் 4:13-18 அப்போஸ்தலர் பவுல் தெசலோனிக்கேய சபைக்கு இவ்வாறு எழுதுகிறார்.

அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

14. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.

15. **கர்த்தருடைய** வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: **கர்த்தருடைய** வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.

பிறகு அவர் சொன்னார் : ஏனெனில், **கர்த்தர்** தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

17. பின்பு உயிரோடிருக்கும் நாமும் **கர்த்தருக்கு** எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் **கர்த்தருடனேகூட** இருப்போம்.

18. ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

Dr. Ed ஹின்சன் இந்த வசனங்களின் பின்புலத்தை தெசலோனிக்கேயர் சபைக்கு விளக்குக்கிறார். அவர்களுக்கு என்ன தெரியும் ? அவர்களின் கேள்விகள் என்ன ? பவுல் என்ன பிரதியுத்திரம் கொடுத்தார் ?

**Dr. எட் ஹின்ட்சன்:** டாக்டர் Ed ஹிண்ட்சன் : பவுல் ஊழியத்தின் இரண்டாவது பயணத்தில்; தெசலோனிக்கேயாவில் 3 வாரங்களுக்கு சபைகளை உருவாக்கி, சீஷர்களுக்கு பைபிள் போதனைகளை குறிப்பாக, இயேசு கிருஸ்துவின் 2ஆம் வருகையை போதித்தார்.

அவர்களுக்காக இயேசு வருவார் என்று குறிப்பிட்டார். கேள்வி என்னவென்றால், இதற்கிடையில் இறந்து போனவர்களின் நிலை என்ன ? ஆவிக்குரிய உடலில் என்றென்றும் வாழ்வார்களா ? அல்லது அவர்கள் இரண்டாம் தர குடிமக்களா ? எதிர்காலத்தில் விசுவாசிகள் ஒன்றாக கூடிவரும் போது இவர்கள் அங்கே இருக்க மாட்டார்களா ? அவர்களுக்கு என்ன நடக்கப்போகிறது என்பது நம்மை நிச்சயம் பாதிக்கும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம், மார்க், ”நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.” என்று பவுல் சொல்லும் போது என்ன அர்த்தப்படுத்துகிறார் ?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** இது ஆத்துமாவைக் குறித்து பேசுகிறது என்றும் அது தூங்குகிறது என்றும் பலர் தவறாக நினைக்கின்றனர். நாம் மரிக்கும் நேரத்திலிருந்து, இயேசுவின் வருகை வரை, இடைப்பட்ட காலத்தில்

ஆத்துமா சுயநினைவிழந்த நிலையை குறிக்கிறது.

ஆனால், வேத வார்த்தைகள் அந்த இடைப்பட்ட காலத்தில் நம் ஆத்துமா உறங்குவதில்லை என்று கூறுகிறது. 2 கொரிந்தியன் 5:8 ல் பவுல் சொல்கிறார் : ”நாம் தைரியமாகவேயிருந்து, இந்த தேகத்தை விட்டுக் குடிபோகவும் **கர்த்தரிடத்தில்** குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.” பிலிப்பியர் 1:23 ல் அவர் சொல்கிறார்; ”தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;” ஆகையால் இயேசுகிருஸ்துவின் விசுவாசி மரித்து போகும் போது, அவர் ஆத்துமா, அல்லது ஆவி, உடணடியாக கர்த்தரிடத்திலே சென்று அவருடன் ஐக்கியமாய் இருக்கும். இங்கு தூக்கம் என்பது உடல், மயானத்திலே கர்த்தரின் வருகைக்காக ஆவலுடன் காத்திருத்தலைக் குறிக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம், உடலுக்கு எதிர்காலம் இருப்பதை கூறுகிறது.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** முற்றிலும் உண்மை

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இவைகள் நடக்கும் போது, இயேசுவில் கிறிஸ்துவில் நித்திரைக்கொள்பவர்களை கடவுளே அழைத்து வருவார் என்று இருக்கிறதே அதைப்பற்றி.

**Dr. எட் ஹின்ட்சன்:** சரி மரணத்தின் போது, ஆவி உடனடியாக சொர்க்கத்திற்கு, கடவுளுடன் இருக்க செல்கிறது. உடல் கல்லறைக்கு போகிறது.

எடுத்துக்கொள்ளப்படுதலை குறித்து பவுல் சொல்லும் போது, நம்முடைய ஆவி இயேசுவோடு திரும்ப வானத்திலிருந்து வருவதை குறிக்கிறது. உடல் மீண்டும் உயிர்த்தெழுவதை அர்த்தப்படுத்துகிறது.

எனவே, வெற்றியை களிப்பும், எக்காள சத்தமும், தேவதூதர்களின் குரலும் ஒலிக்கும்.

கிறிஸ்துவில் மரித்தவர்கள் எழுந்து, அவர்கள் ஆவிகளுடன் இணைக்கப்படுவார்கள்

இப்போது, "சரி, நித்திய வாழ்க்கைக்கு எனக்கு ஏன் உடல் வேண்டும் என்று சிலர் கேட்பாரகள்."

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வாக்குதத்ததின் படி என்று பவுல் கூறுகிறார். அவர் உடல் ரீதியாகவும், சொல்லர்த்தமாகவும், உயிர்த்தெழுந்தார். ஆகையால் நாமும் அதே போல் உடல் ரீதியாக, சொல்லர்த்தமாக எழுவோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, மாற்கு, ஒரு முக்கியமான வார்த்தைகளை சொல்கிறார். அது அவருக்கு எங்கிருந்து கிடைத்தது.

"இவைகளை கர்த்தருடைய வார்த்தையினால் உங்களுக்கு சொல்கிறேன்." என்று சொல்லும் போது எதை அர்த்தப்படுத்துகிறார் ?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆனால், பவுல் இந்த தகவல்களை நேரடியாக கர்த்தரிடமிருந்து பெற்றார். 1 கொரிந்தியர் 15,

கர்த்தரை அடைவதை ஒரு புதிராக சொல்கிறது. அதேசமயம், கர்த்தரிடமிருந்து இவைகள் அவருக்கு கிடைத்திருக்கலாம், அல்லது, இயேசுவும் பூமியில் இருந்த போது அவருக்கு இவைகளை கற்பித்திருக்கலாம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஜான் 14.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** யோவான் 14:1-3 ல் சொல்லும் போது, கர்த்தரின் வார்த்தையினால் இவைகளை சொல்கிறேன். இயேசுவின் பிரசங்கத்திலிருந்து பவுல் இவைகளை தெரிந்திருக்கிறார். அதே சமயம் நேரடியாக கடவுளிடமிருந்தே அவை அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்திருக்கலாம். ஆகையால் இவைகள் பவுலே உருவாக்கிய கட்டுக்கதைகள் அல்ல. விலைமதிக்கமுடியா உண்மையை நமக்காக கர்த்தரிடமிருந்து நேரடியாக பெற்றிருக்கிறார்.

**Dr.ரான் ரோடஸ்:** அது முக்கியம்ன்னு நினைக்கிறேன் John, ஏனென்றால் இன்று அனேக கிறிஸ்தவர்களே இவைகள் மனிதர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள்

என்று சொல்கிறார்கள்.  ஆனால், இந்த வேதவாக்கியங்கள் கர்த்தரிடமிருந்து வந்தது என்பதை உணர்த்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, அவர் என்ன சொன்னார் ? இந்த வார்த்தைகளை கவணிங்க, "கர்த்தர் தாமே." இதை பற்றி என்ன நினைக்கிறீங்க.

**Dr. எட் ஹின்ட்சன்:** அதாவது, ”கர்த்தர் தாமே வானத்திலிருந்து இறங்கி வர காண்பீர்கள்” என்று கிறிஸ்துவின் திரும்ப வருதலை பற்றி எழுதியிருக்கிறது. மேலும், அவர் மேகங்களினூடே வரும் போது, விசுவாசிகளை வானத்திற்கு எடுத்துக்கொள்வார், மேகங்கள் நடுவே பிதாவின் வீட்டிற்கு அவரைக் காண அழைத்துச்செல்வார். ஆகையால், இயேசுவின் திரும்ப வருதலுக்கான வாக்குறுதி இருக்கிறது. விசுவாசிகள் மீண்டும் உயிர்த்தெழுவார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது; கர்த்தரை விசுவாசிக்கிற அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது. உயிர்த்தெழுதல், திரும்ப வருதல், மகிழ்ச்சியான வாழ்க்கை இவை எல்லாமே இந்த ஒரு வேத வாக்கியத்தில் அடங்கியுள்ளது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது மட்டுமில்லாமல், மாற்கு, அவர் இவ்வாறு கூறுகிறார்: முதலாவதாக அவர் பலத்த குரலோடு, மேலிருந்து இறங்கி வருகிறார் என்று சொல்லும் போது, அதற்கு அவர் முதலில் உயிர்த்தெழுந்திருக்க வேண்டும்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆமாம்

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி? அப்படியென்றால், அவர் உயிர்த்தெழுவார். அதே சமயம், ”நாமெல்லாம்,” என்று பவுல் தன்னையும் சேர்த்து சொல்லும் விதம் எனக்கு

மிகவும் பிடிக்கும். அவர் வாழ்நாளிலே அது நடக்கும் என்று அவர் எதிர்ப்பார்த்தார். நாமும் கர்த்தரை வானிலே வருதலை பார்ப்போம் என்று எதிர்ப்பார்க்கலாம்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** உண்மைதான்.

கர்த்தர் மீண்டும் வரும் போது, ஒன்று விசுவாசிகள் உயிருடன் இருப்பார்கள். அல்லது இறந்திருப்பார்கள். என்பது, மிக சுலபமாக புரிந்துக்கொள்ளக்கூடிய விஷயம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம்

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஒரு வேளை அவர்கள் இறந்தாலும், அவர்கள் உடல்கள் உயிர்த்தெழுந்து, ஆவியோடு மீண்டும் சேர்ந்துவிடும். அந்த உடல் அழியாதது, சீர்குலையாததாக இருக்கும். ஆனால், கர்த்தர் வரும் போது பூமியில் உயிரோடு இருக்கிறவர்கள் உடணடியாக கர்த்தரிடத்தில் சேருவார்கள். 1 தெசலோனிக்கேயர் 4:17?ல் ”எடுத்துக்கொள்ளப்படுவார்கள்” என்கிற பதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ”எடுத்துக்கொள்ளப்படுதல்” என்கிற வார்த்தையே பைபிளில் இல்லை என்று பலர் வாதிடுவர். ஆனால், கிரேக்க வார்த்தை ஹர்பசோ Harpazo என்பதன் அர்த்தம், பிடிபடுவது, மாட்டிக்கொள்வது, அடைபடுவது என்பதாகும். ஆகையால், உயிரோடிருப்பவர்கள் மிகப்பெரிய மாற்றத்திற்கு உட்படுவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மைதான்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** மறுபடியும், அவர்கள் சீர்குலையாததும், அழியாததும், நித்தியமான ஒரு உடலை பெறுவார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆம். இன்னும் அதை ஆழமாக சிந்தித்தால், ”எடுத்துக்கொள்ளப்படுதல் என்கிற கோட்பாடு பைபிளில் எங்கிருக்கிறது” என்று மக்கள் கேட்டால், இருக்கிறது, கிரேக்கத்தில் Harpazo ஹர்பசோ என்று சொல்லலாம். ஆனால், அதையே லத்தினில் மொழிபெயர்த்தால், என்ன ஆகிறது ரான் ?

**Dr.ரான் ரோடஸ்:** அதாவது, raptus என்கிற வார்த்தையை பயன்பத்திவந்தனர். அது rapere என்கிற வார்த்தையிலிருந்து வந்ததாகும். அதிலிருந்துதான் ”எடுத்துக்கொள்ளப்படுதல்” என்கிற வார்த்தை வருகிறது. அது பிடிப்பது அடைப்பது என்கிற அர்தத்தை கொடுக்கிறது. வலுக்கட்டாயமாக கைப்பற்றுவது என்று நேரடியாக பொருள் படுகிறது. வானில் கர்த்தர் வரும் போது மென்மையாக கவருவதல்ல, மாறாக, கர்த்தர் தன் மக்களை அவர் வானிலிருந்து வலுக்கட்டாயமாக கவர்வதை அர்த்தப்படுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆம், ”கர்த்தருக்குள் இறந்தவர்கள் முதலில் எழுவார்கள்” என்கிற முழு விஷயத்திலும், ”உயிரோடிருக்கும் நாமும் **கர்த்தருக்கு** எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் **கர்த்தருடனேகூட** இருப்போம்.” பாஸ்டன் நகரத்திற்கு அல்ல, ஆனால், வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவரகள். அதைப்பற்றி சொல்லுங்கள்.

**Dr. எட் ஹின்ட்சன்:** சரி, இந்த எல்லா கருத்திலும் மிக முக்கியமானது இந்த வசனங்கள் தான். கர்த்தர் மீண்டும் வானில் வருவது, மேகங்களினூடே வருவது, விசுவாசிகளை கர்த்தர் தன் தகப்பனின் வானுக்குரிய வீட்டிற்குள் எடுத்துக்கொள்வது, அவர் இந்த நேரங்களில் பூமிக்கு வருவதில்லை. பூமியை தொடுவதுமில்லை. வானிலிருந்தபடியே அவர்களை எடுத்துக்கொள்கிறார். ஆகையால், "எடுத்துக்கொள்வது" என்பது இந்த வசனங்களுக்கு மட்டும் உரியது அல்ல. ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். எலியா எடுத்துக்கொள்ளப்பட்டான். நீங்களும் கூட பைபிள் முழுவதும் எடுத்துக்கொள்ளப்படுதலை காணமுடியும். வெளிப்படுத்துதல் விஷேசத்தில், இரண்டு சாட்சிகள் எடுத்துக்கொள்ளப்படுதலில் திலைப்பதை காணமுடியும். வெறுமனே சொல்வது மட்டுமல்ல, உண்மையிலேயே வேதாகமம் முழுவதும், ஒருவர் கடைசியாக அடைய வேண்டிய நிலை குறித்த திட்டமும், நோக்கமும் கர்த்தருக்கு இருக்கிறது. நம்முடைய ஆத்துமாவுக்காக மட்டுமல்ல, உடலுக்காகவும் கர்த்தர் வருகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதாவது இரண்டு விஷயங்கள், Ed. ஒன்று, பைபிளை படிக்கும் ஒவ்வொரு கிறிஸ்துவரும், வானத்தினூடே எடுத்துக்கொள்ளப்படுதல் நமக்காக காத்திருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். சரி ? அது பைபிளில் இருக்கிறது, சரியா ? இரண்டாவதாக, இயேசுவின் திரும்ப வருதலை குறித்த தீர்க்கதரிசங்களை நாம் வாசிக்கும் போது, இரண்டு கட்டங்களாக அது எடுத்துரைக்கிறது. அவைகள் என்ன ?

**Dr. எட் ஹின்ட்சன்:** அதாவது, வானத்திற்கு ஏடுத்துக்கொள்ளப்படுவதும், பூமிக்கு திரும்ப வருவதும்: நாம் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் என்ன சம்பவிக்கும். நாம் பூமிக்கு திரும்ப கர்த்தரோடு வரும்போது என்ன நடக்கும் ?

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆம், விவரங்களை ஆராந்தால், இரண்டு கட்டங்கள் இதற்கு இருக்கிறது என்று நாம் கூறும்போது, நியாதீர்ப்பு காலத்திற்கு சில வருடங்கள் பிரிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக,

எடுத்துக்கொள்ளப்படுதல் **குறித்து நமக்கு சொல்லப்பட்டுவருகிறது. இயேசு வானங்களினூடே வரும்போது நாம் அவரை பார்ப்போம். இரண்டாவது வருகையின் போது இயேசு பூமிக்கு வருவார்.**

எடுத்துக்கொள்ளப்படும் போது கிறிஸ்து சீஷர்களுக்காக வருகிறார். மற்றும் இரண்டாவது வருகையின் போது கிறிஸ்து தன் சீஷர்களோடு வருவார்.

எடுத்துக்கொள்ளப்படும் போது, விசுவாசிகள் பூமியிலிருந்து புறப்படுவார்கள். இரண்டாவது வருகையின் போது அவிசுவாசிகள் பூமியிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

எடுத்துக்கொள்ளப்படும் போது, கிறிஸ்து மணமகளுக்காக வருகிறார். இரண்டாவது வருகையின் போது, கிறிஸ்து மணமகளுடன் வருகிறார்.

எடுத்துக்கொள்ளப்படும் போது, எந்த அறிகுறிகளும் இருக்காது, அது உடணடியாக நடைபெறும் ஒரு நிகழ்வு, அதை வேறு வசனங்களில் நாம் பார்க்க முடியும். இரண்டாவது வருகை, ஆயிரக்கணக்கான அடையாளங்கள் நாம் காண இருக்கும் மத்தேயு 24.

எடுத்துக்கொள்ளப்படுதல் ஒரு கணத்தில், கண்ணிமைக்கும் நேரத்தில் நடக்கும், அவருக்கு சொந்தமானவர்கள் அவரைப் பார்ப்பீர்கள். ஆனால் இரண்டாம் வருகையின் போது, அவர் முழு உலகுக்கும் தெரியக்கூடியவராக இருப்பார். எல்லா கண்களும் அவரை காணும்.

எடுத்துக்கொள்ளப்படும் போது பேரழிவு ஆரம்பமாகும்: இரண்டாம் வருகையின் போது பேரானந்தம் தொடங்கும்.

இதெல்லாம் சில விவரங்களே, மேலும் இது குறித்து வேறு ஒரு நிகழ்ச்சியில் அதிகம் அறியப்போகிறோம். அந்த விவரங்கள் கிறிஸ்துவின் திரும்ப வருகையின் போது இருந்த இரண்டு கட்டங்களை விளக்கும்.

**Dr. எட் ஹின்ட்சன்:** ஆமாம், ஒரே நிகழ்வில் பல காரியங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரியா சொன்னீங்க

**Dr. எட் ஹின்ட்சன்:** இரண்டு கட்டங்கள் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மைதான். ஆனால், இவை எல்லாவற்றையும் விட, எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்வு குறித்து கிறிஸ்துவர்கள் இரண்டு வேறுபட்ட கண்ணோட்டங்களை கொண்டிருக்கிறார்கள். அவை என்னென்ன ? ஒரு சிறு இடைவேளைக்கு பிறகு, கிறிஸ்துவர்களின் அந்த இரு கண்ணோட்டங்களை பற்றி பேசுவோம். விசுவாசிகளே, miss பண்ணாம பாருங்க. சுவாரஸ்யம் காத்திருக்கிறது.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** விசுவாசிகளே, நாம் டாக்டர் Ed ஹின்சன், Dr. மாற்கு ஹிச்காக், டாக்டர் ரான் Rhodes ஆகியோரோடு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். எடுத்துக்கொள்ளுதல் குறித்து சபைகளில் 4 கண்ணோட்டங்கள் இருக்கிறது. அவைகள் பற்றி பேசலாம். முதலில் பேரழிவிற்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறுமா ? அது மாகஉபத்திரவத்திற்கு முன்பு என சொல்லலாமா ? உங்கள் பார்வையில் ?

**Dr. எட் ஹின்ட்சன்:** நியாயத்தீர்ப்புக்கும், மகா உபத்திரவத்திற்கும் முன்பே இயேசு கிறிஸ்துவின் எடுத்துக்கொள்ளப்படுதல் வரும், வெளிப்படுத்துதல் சுவிஷேசத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் நியாயதீர்ப்புக்கு முன்பாக

சபைகள் பிதாவின் வீட்டிற்கு

எடுத்துக்கொள்ளப்படும். மகா உபத்திரவத்திற்கு முன்பே எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும்: அது எந்த நேரமும் எப்போது வேண்டுமானாலும் நடைபெறும். என்னை

நோக்கி காத்திருங்கள். எனக்காக காத்திருங்கள், வானத்தை நோக்கி காத்திருங்கள், இயேசு எந்த நேரத்திலும் திரும்ப வருவார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம். Ron இரண்டாம் நிலையில் இருக்கும் மக்களை பற்றி கூறும் போது, "எடுத்துக்கொள்ளப்படுதலை பற்றி வேறு இடத்தில் பைபிள் பேசுகிறது, மகா உபத்திரவம் நடைபெறும் என்று சொல்லும் போதே அதை வைத்து பார்த்தால், என்ன, அது மகா உபத்திரவத்தின் மையத்தில் என்று சொல்லலாம். உபத்திரவத்தின் எல்லா கஷ்டங்களையும் நாம் அனுபவக்கப்போவதில்லை. அதன் கடைசி கட்டங்களில் நாம் பாதுகாக்கப்படுவோம். அதை பற்றி சொல்லுங்கள். மகாஉபத்திரவத்தின் மைய பகுதி அப்படின்ன என்ன ?

**Dr.ரான் ரோடஸ்:** அதாவது, மகாஉபத்திரவம் ஏழு ஆண்டுகள் நடைபெறும்.

தானியேல் 9:27 ல் அதை காணலாம்.

மகா உபத்திரவத்தின் மையம் என்றால் மூன்றரை ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறுவதை குறிக்கும்.

அப்போது, தேவகோபாக்கினை இரண்டாம் பாதி கட்ட சமயத்திற்கு முன்பாக சபைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்கிறார்கள். பிரச்சனை என்னவென்றால், முழு மகா உபத்திரவத்தையும் கடவுளின் கோபத்திற்கு உருவகப்படுத்தி அந்த வசனங்கள் பேசுகிறது. உதாரணத்திற்கு சபைகள் சபைகள் "உபத்திரவ நேரங்களிலிருந்து" விடுவிக்கப்படும் என்று வெளிப்படுத்துதல் 3:10 சொல்கிறது. அது தான் மகா உபத்திரவத்தின் உண்மையான கால அளவு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மொத்த கால அளவு

**Dr.ரான் ரோடஸ்:** முழு காலகட்டம். இப்போது, 1 கொரிந்தியர்15 ல் சொல்லப்பட்டிருக்கும் எக்காளத்தையும் வெளிப்படுத்துதல் 11:15 ல சொல்லப்பட்டிருக்கும் எக்காளத்தையும் ஒப்பிட்டு வாக்குவாதம் செய்வார்கள்.

ஏழாம் எக்காளமும், கடைசி எக்காளமும் இருக்கிறது.

வெளிப்படுத்துதலில் 7 ஆம் எக்காளம் மகா உபத்திரவத்தின் மையப்பகுதியின் நடைபெறும். அகையால் தான் 1 கொரிந்தியர் 15 மகா உபத்திரவத்தின் மையப்பகுதியன் நடைபற வேண்டும் என்று அர்த்தப்படுத்த வேண்டும்..

பிரச்சனை என்னவென்றால், இந்த இரண்டும் வெவ்வேறு சூழலில் நடப்பதாகும்.

வெளிப்படுத்துதல் புத்தகத்தை பார்த்தால்,

ஏழு எக்காளங்கள் நியாயத்தீர்ப்பை குறிக்கிறது.

அது கடவுளின் கோபாக்கினையை கட்டவிழ்த்துவிடுகிறது.

1 கொரிந்தியர் 15 ல் கிறிஸ்து திரும்ப வரும் அதே சமயம், விசுவாசிகள் வானத்தினூடே எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்கிறது. எக்காளம் என்பது பைபிளில் பல்வேறு சூழ்நிலைகளை குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. ஆகையால், நடுவில் ஒரே ஒரு குறிப்பை எடுத்து பேசுவது முறையாகாது.

இப்படி சொல்லாம் ஜான், எதிர்காலத்தில் தீர்க்கதரிசனத்தை கடவுள் எவ்வாறு நிறைவேற்றுவார் என்பதை தெரிந்துக்கொள்ள வேண்டுமானால், கடந்த காலத்தில் அவர் எப்படி தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினார் என்பதை பாருங்கள். சொன்னபடியே அவர் செய்திருக்கிறார்.

எக்காளத்தை குறித்து சொல்லர்த்தமாகவே எடுத்துக்கொண்டாலும், கடவுளின் கோபாக்கினை நீயாத்தீர்ப்பின் போது, சபைகளில் இருந்து தான் துவங்கும், நடுவிலிருந்து அர்த்தம் செய்ய முடியாது. மாக உபத்திரவத்திற்கு முன்பாக, திரும்பவருதல் மட்டுமே, சொல்லர்த்தமாக பொருந்தக்கூடியது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** Dr. மார்க் ஹிட்ச்காக், மற்றொன்றும் நெருக்கமாக இருந்தாலும், இரண்டும் ஒன்றல்ல.

அது கோப்பாக்கினைக்கு முந்தயதாகும்.

இதற்கும், மாகாஉபத்திரவத்திற்கு மத்திய பகுதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன ?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** பல கோணங்களின் பார்க்கும் போது கோபாக்கினைக்கு முந்தய நிலை புதிதானது,

திரும்ப வருதலின் மூன்றில் ஒரு பங்கு காலம்.

7 வருட மகா உபத்திரவத்தில், ஐந்தரை ஆண்டுகள் திரும்ப வருதல் நடைபெறும் என்று அவர்கள் நம்புகிறார்கள். வெளிப்படுத்துதல் 6 ல் விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப்படுதலை ஆறாவது மற்றும் ஏழாவது நியாயத்தீர்ப்பின் முத்திரையின் போது நடைபெறும் என்று கூறுகிறது.

அடிப்படையில் அவர்கள் கூறுவது, முதல் ஐந்தரை ஆண்டுகள் கடவுளின் கோபாக்கினை அல்ல. அது மனிதனின் கோபாக்கினை. அது சாத்தானின் கோபாக்கினை, கடவுளின்

கோபாக்கினை குறுகியதாகவும், மாகா உபத்திரவத்தின் கடைசி கால் பங்கில் வரும். நாம் ”எடுத்துக்கொள்ளப்படும்” அந்த சமயத்தில் நடைபெறும்.

அதோடு, எழக்கூடிய சில பிரச்சனைகள், உபத்திரவத்தின் ஆரம்பத்திலேயே கடவுளின் கோப்பாகினை வரும் என்று ஆவிக்குரிய விதத்தில், தோன்றலாம். அதற்கான முத்திரை போடப்பட்ட நியாத்தீர்ப்பு, வசனங்களில் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆம், இயேசு முத்திரைகளை திறக்கிறார்.

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆமாம். இயேசு ஆட்டுக்குட்டியானவர். அவர் இந்த முத்திரைகளை திறக்கிறார். இப்போது முதல் நான்கு முத்திரைகள் திறக்கப்பட்டுள்ளன. அவை 4 வெள்ளை குதிரை மேல் வரும் வீரர்கள் என்றழைக்கப்படுகிறார்கள். அவைகள் போர், பஞ்சம் போன்றவைகளை அது குறிக்கும். அவர்கள் கடவுளாலேயே வழிநடத்தப்படுகிறார்கள் ஆகையால் வெளிப்படுத்துதல் 6 ல் கூறுவது போல கோபாக்கினை இறுதியில் வரும்.

இன்னொரு பிரச்சனை, 1 தெசலோனிக்கேயர் 5 கர்த்தரின் நாள் எப்போது வருகிறது என்று சொல்கிறது, அது, மக்கள் ”சமாதானம், பாதுகாப்பு” என்று சொல்லும் போது வரும், மாகா உபத்திரவத்தின் காலம். 6ஆவது 7ஆவது நியாயத்தீர்ப்பின் முத்திரைகள் உடைக்கப்படும் போது, மக்கள் சமாதானம், பாதுகாப்பு என்று சொல்வது வினோதமாக இருக்கும். ஏற்கணவே முதல் 5 முத்திரைகளை பற்றி பார்த்தோம். 4ஆவது முத்திரையின் போது, பூமி அழியும். அப்போது மக்கள் சமாதானம், பாதுகாப்பு என்று சொல்வது அர்த்தமற்றதாக இருக்கும். ஆகையால், இந்த இரண்டு வசங்களும், கோபாக்கினைக்கு முன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பாக நடைபெறுவதாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உண்மைதான். Ed, உபத்திரவத்திற்கு பிறகு என்ன நடைபெறும், அதை பற்றி சொல்லுங்களேன்.

**Dr. எட் ஹின்ட்சன்:** சொல்றேன். எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது, மாகா உபத்திரவத்திரத்திற்கு முன்னும், பின்னும், இடையிலும் நடக்கும். ஆகையால், மாகா உபத்திரவம் வரும் என நினைப்பார்கள், அது 7 வருடங்கள் என நினைப்பார்கள், எடுத்துக்கொள்ளப்படுதல் நடைபெறும் என நினைப்பார்கள். அப்போது அவர்கள், எப்போதும் தண்டனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் சபை நியாயத்தீர்ப்பின் போது, தண்டனையிலிருந்து எப்படி தப்பிக்கும் ? என்பார்கள். ஆனால், தண்டனைக்கும், கடவுளின் கோப்பாக்கினைக்கும் மிகப்பெரும் வித்தியாசம் இருக்கிறது. கடவுளின் கோப்பாக்கினை வெளிப்படுத்துதல் புத்தகத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. நீங்கள், முத்திரைகளை திறக்கும் கிருஸ்துவின் மணமகள், கோபாக்கினையை அனுபவிப்பாள். கடவுளின் கோபாக்கினை நியாயத்தீர்ப்பின் கிண்ணத்திலிருந்து ஊற்றப்படும். ஆகிலும் மணமகள் முடிவு பரியந்தம் தப்பிப்பிழைப்பாள். இது மணமகளை நித்தியத்திற்கு தயாராக்குவதாகும். என்னை பொருத்தவரை இது புரோடஸ்டண்ட்களின் பாவக்கடன் போன்றது.

நம் பாவங்களை இயேசு சிலுவையில் சுமந்தார் என்பது தெளிவாக இருக்கிறது. அவர் நம்முடைய இடத்தில் மரித்த பிறகு, நம்முடைய பாவங்கள் சிலுவையில் அவர் மீது சுமக்கப்பட்டது. கோப்பாக்கினைக்கு நாம் தகுதியானவர்களே, ஆனால், நாம் கோபாக்கினைக்குள்ளாக மாட்டோம். ஏனென்றால் இயேசு கடவுளின் கோபாக்கினையை நம்மிடமிருந்து எடுத்துவிட்டார்.

**Dr.ரான் ரோடஸ்:** அதை மையமாகக் கொண்டு, 1 தெசலோனிக்கேயர் 4:18 " இந்த வார்த்தைகளால் ஒருவருக்கொருவர் தேற்றுங்கள்" என்று சொல்கிறது. மகா உபத்திரவத்திற்கு பிறகு இது பொருந்தாது. கிறிஸ்தவ சபையும், முத்திரையின் நியாய தீர்ப்பு, எக்காள நியாயத்தீர்ப்பு, கிண்ணத்தின் நியாயத்தீர்ப்பினூடாக, அர்மகெதோனை எதிர்க்கொண்டு, மகா உபத்திரவத்திற்குட்பட போகிறது. "ஆகையால், இந்த வார்த்தைகளால் ஒருவரையொருவர் தேற்றுங்கள்"

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமாம், உங்கள் கண்ணோட்டங்கள் அனைத்தையும் பார்க்கும் போது, மகா உபத்திரவத்தின் உட்கருவிற்கு நம்மை கொண்டுச் செல்கிறது. கோடானுகோடி மக்கள் அழிந்திருக்கிறர்கள் என்று சில அறிஞர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகையால், அந்த சமயத்தில் சமாதானமும் பாதுகாப்பும் இறாது. மேலும், இதைப்பற்றி, இயேசு இவை எல்லாவற்றிலிருந்தும் நம்மை காப்பார் என்று பேசும் பைபிளின் வேறு வசனங்களையும் இப்போது பார்ப்போம். அவர் நம்மை எல்லா தீங்கிலிருந்தும் காக்கிறவர்.

சரி, Ed, இன்று கலந்தாலோசித்தவைகளை மீண்டும் சுருக்கமாக பார்க்கலாம்.

”எடுத்துக்கொள்ளப்படுதல்” தலைப்பு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது ?

**Dr. எட் ஹின்ட்சன்:** ஏனென்றால் விசுவாசிகளுக்கு நம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கிற ஒரு தலைப்பு இது. நாம் மூவரும் அதை ஆய்வு செய்திருக்கிறோம், ஆராந்திருக்கிறோம். விவாதித்திருக்கிறோம். இந்த விஷயங்களை 40 வருடங்களுக்கு அல்லது அதற்கு மேலாக போராடியிருக்கிறோம். பைபிளின் போதனை இதுவேயாகும். பவுல் சொன்னபடியே, "ஒருவரையொருவர் இவ்வசனங்களால் ஆறுதல்படுத்துங்கள், ஆறுதலளிக்கும் வேதவார்த்தைகள், விசுவாசிக்கிறதற்கு உற்சாகமளிக்க வேண்டும், ஏனென்றால் இயேசு எந்த நேரத்திலும் திரும்ப வருவார் என நம்புகிறோம்.

நான் ஒரு தேவாலயத்தில் உட்கார்ந்திருந்தேன், அங்கு ஒரு நண்பன் மகா உபத்திரவத்திற்கு முன்பான காலகட்டங்களை நம்பவில்லை. அவர் தனது முழு பிரசங்கத்தையும் முடித்து பிறகு,

"எனவே, நீங்கள் பார்த்தபடி, “எடுத்துகொள்ளப்படுதல்” நடபெறாது, என்றார்.

அவர் சொல்வது தவறு. அவர் எடுத்துக்காட்டும் வசனம் ஒரு வேளை இருந்தாலும்,

வெவ்வேறு காலகட்டத்தில் பொருந்தும் வசனங்களை ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

"மகா உபத்திரவத்தை தவிற நாம் எதிர்பார்க்க வேறொன்றுமில்லை” என்றார்.

அவருடைய சபையிலுள்ள மக்கள் பலமாக புலம்பி அழுதனர்.

நான் பின்னால் எழுந்து நின்று பேச ஆசைப்பட்டேன், ஆனால் நான் அப்படி செய்யவில்லை.

பிறகு அவருடன் பேசி சொன்னேன் : “ வில்சன், எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது இருக்கிறது. அது எப்போது நடைபெறும் என்பதை பொருத்திப்பார்ப்பதில் தான் நாம் ஒத்துப்போவதில்லை. ஆனால், என்னுடைய பார்வையில் கடவுளுடைய வார்த்தைகள் ஆருதலும், உர்ச்சாகத்தையையும் ஊக்கத்தையும் அளிக்கிறது என்றேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வேறு என்ன, மாற்க் ?

**Dr. மார்க் ஹிட்ச்காக்:** ஆம், எடுத்துக்கொள்ளப்படுதல் நமக்கு உந்துதல் அளிக்கிறது. பலத்தை தருகிறது. 1 கொரிந்தியரில் கடைசியில் எடுத்துக்கொள்ளப்படுதலை பற்றி பேசுகிறார். அப்போஸ்தலன் பவுல் சொல்லும் போது, ”ஆகையால்,.. **கர்த்தருக்குள்** நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், **கர்த்தருடைய** கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.” இது நம்பிக்கையை உந்துவிக்கிறது. வாழ்வதற்கும், கர்த்தரில் உழைக்கவும் ஊக்கமளிக்கிறது. சுத்தீகரிக்கப்பட்ட ஒரு நம்பிக்கையை கொடுக்கிறது. 1 யோவான் 3 சொல்கிறது, : "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல, தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." இயேசு திரும்ப வருவார் என்கிற நம்பிக்கையோடு, கடவுளுடைய விருப்பத்திற்கு மாறாக பாவமுள்ள வாழ்க்கையையும் கொண்டிருக்க முடியாது. இந்த இரண்டும் பொருந்தாது. இது நம்மை சுத்திகரித்து, கர்த்தருக்குள் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும். உண்மையில், எடுத்துக்கொள்ளப்படுதல் கோட்பாட்டை குறித்து ஜனங்கள் பேசும் போது, அது ஏதோ வானத்திலிருக்கும் உணவாக கருதுகிறார்கள். எப்போதோ எதிர்காலத்தில்

நடைபெறும் ஒன்றாக, நம் தினசரி வாழ்க்கைக்கு ஒத்துவராத ஒன்றாக நினைக்கிறார்கள். எடுத்துக்கொள்ளப்படுதல் குறித்து பைபிளில் குறிப்பிடும் போதெல்லாம். இன்று அது எவ்வாறு பொருந்துகிறது என்பதையும் தெளிவாக சொல்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அருமை, நான் ஜேம்ஸ் குறித்து யோசிக்கிறேன்.

அவர் சொல்கிறார், நியாயபதி நம் கதவருகே நிற்கும் போது கலங்க வேண்டாம். அவர் வர தாயாராக இருக்கிறார். வேற என்ன Ron ?

**Dr.ரான் ரோடஸ்:** அப்போஸ்தலனாகிய பவுல், கிறிஸ்துவில்

நித்திரையடைந்தவர்களைப் பற்றித் தெசலோனிக்கேயர் அறியாமல் இருக்க விரும்பவில்லை என்று சொன்னார்.

அவர்கள் எடுத்துக்கொள்வதை பற்றி அறியாதவர்களாக இருப்பது தவறு. கடவுளின் வார்த்தையை புரிந்து கொண்டாலே அறியாமை இருளிலிருந்து வெளியேறலாம்.

எதற்காக எழுதப்பட்டதோ, ஏற்கணவே நடந்த தீர்க்கதரிசனங்களை எப்படி

புரிந்துக்கொண்டோமோ, அதே போல, சொல்லர்த்தமாகவே

அறிந்துக்கொள்வதின்மூலம், கடவுளுடைய வார்த்தைகளை புரிந்துகொள்ளலாம். ஆகையால், எடுத்துக்கொள்ளப்படுதலாக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் அதை சொல்லர்த்தமாகவே புரிந்துக்கொள்வது எளிதாக இருக்கும்.

இப்போது, ஒன்றிணைதல் பற்றி எனக்கு ஆர்வம் அதிகரிக்கிறது. என் தாய் இறக்கும் போது நான் அவருடன் இருந்தேன். நித்தியத்திற்கு அவர் செல்லும் போது அவர் கைகளை பற்றியிருந்தேன். அவரை அரவணைப்பது அதுவே கடைசி என்று நான்

நினைக்கவில்லை. அவர் குரலை கடைசியாக கேட்கிறேன் என்றும் நம்பவில்லை. நமக்கு

ஒன்றிணைதல் நடைபெறப்போகிறது. அந்த நம்பிக்கை என் ஆவிக்குரிய படகை நகர்த்தும் காற்றாக அமைந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆம். 1 தெசலோனிக்கேயர் வசங்களை இன்று பார்த்தோமேயானால், கிறிஸ்தவர்கள் அனைவரும் இங்கிருந்து எடுத்துக்கொள்ளப்பவார்கள், மற்றவர்கள் கைவிடப்படுவார்கள் என்பது நிதர்சனம். ”நான் கிறிஸ்தவன் அல்ல, ஆனால், கைவிடப்படவும் மனமில்லை, மகா உபத்திரவத்தை எதிர்க்கொள்ளவும் விருப்பமில்லை.” என்பவர்களும், தான் எடுத்துக்கொள்ளப்படுவோமா, இல்லையா என்பதை எப்படி ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளலாம், Ed ?

**Dr. எட் ஹின்ட்சன்:** உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்று நிச்சயமாய் தெரிந்து கொள்ள வேண்டும்,

அவர் மரித்தோரிலிருந்து எழும்பினார்.

அவர் மீண்டும் வருகிறார். இதை உங்கள் மனதிலும், இருதயத்திலும், முழு நம்பிக்கையோடு அறிந்திருத்தல் வேண்டும்.

"நான் அதை செய்யப் போகிறேன் என்று நம்புகிறேன்"

என்று சொல்லக்கூடாது.

இரட்சிப்பு ஒருவேளை நடக்கலாம் என்பதல்ல. வேதவாக்கியம் சொல்கிறது:, "நித்திய ஜீவன் உண்டென்று அறியும்படிக்கு இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.”

இது இயேசு நாம் வாழும் இடத்தில் மரித்திருக்கிறார் என்பதை குறிக்கிறது.

நம் பாவங்களுக்காக இரத்தம் சிந்தியிருக்கிறார்.

மரித்தோரிலிருந்து நமக்காக உயிர்த்தெழுந்திருக்கிறார். “சிலுவையில் இயேசு எனக்காக செய்ததில் என் நம்பிக்கையையும், எதிர்க்காலத்தையும் வைக்கிறேன்.”

கிறிஸ்துவின் வருகைக்காக நான் காத்திருக்கிறேன் என்ற உறுதியும் அது நமக்கு உறுதியளிக்கிறது. நம்மை பயமுறுத்த பைபிள் தீர்க்கதரிசனங்கள் எழுதப்படவில்லை, மாறாக நம்மை தயார்படுத்தவே சொல்லப்பட்டிருக்கிறது. நேரமும், நம்பிக்கையும் இருக்கும் போதே இயேசுவிடம் வாருங்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இது ஒரு மகத்தான வார்த்தை,

அடுத்த வாரமும் நாம் தொடர்வோம்.

இந்த வேதவார்த்தைகளை நாம் கட்டியெழுப்புவோம். பைபிள் என்ன சொல்கிறது என்பதை நீங்கள் அறிய வேண்டும். இவர்கள் அதை தெள்ளத்தெளிவாக எடுத்துரைப்பார்கள். எடுத்துக்கொள்ளுதல் குறித்து நாம் மற்றொரு முக்கியமான வாக்கியங்களை அலசப்போகிறோம். அதிலும் நீங்கள் கலந்துக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.